வானமர் துயர் தீர்க்க வண்ணமயில் ஏறிநின்றாய்
தேனமுத வள்ளி தெய்வானையுடன் கூடி நின்றாய்
நான் அழுத கண் மழையால் நல்லை எங்கும் வெள்ளமடா
நாயகனே எங்களுக்கு நல்ல வழி சொல்லனடா

வேல் முருகா அருள் தா முருகா 2
மால் மருகா நல்லை வாழ் முருகா 2
வா முருகா துயர் தீர் முருகா
மால் மருகா நல்லை வாழ் முருகா 2

நல்லையில் வாழ்கின்ற நாதனின் திரு நாட்டில் தொல்லைகள் குடியேறுமா
எல்லையில் இருந்தின்னும் எறிகணையால் எம்மை கொல்லுதல் அரங்கேறுமா 2
கொல்லுதல் அரங்கேறுமா

அசுரர் திரைகள் முன்னர் எரியும் வரையில் நின்று மாலையில் சிரித்திட்ட வேளை
அதர்ம படைகள் இன்று எறியும் கணைகள் வென்று புலிகள் உலவுகின்ற வேலவா 2

தமிழை பிறப்பித்த வேலவா
விழிகள் திறந்திட்டு ஓடிவா 2
வேலவா நீ ஓடிவா 2
திருவிழி திறந்திடு
அதிர் ஒளி வரமிடு
திரு புலி ஜெய மிடு
வரு துயர் எரியுது
ஒரு மொழி உரையிது
பகைவர்கள் உயிர் எடு
தருமையில் தமிழர்கள் துயர் கெட வரம் இடு